


01.05.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு நடைபெறவுள்ள 3-வது கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அரசியல் கட்சி தலைவர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

2. தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு தண்ணீர் பந்தல்கள் திறக்க தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது.

3. தொழிலாளர் தினமான மே தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில் கல்குவாரியில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

5. சீன செங்குடுவில் நடைபெறும் தாமஸ் கோப்பை பேட்மிட்டன் ஆடவர் இறுதி லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இந்தியா இன்றுமாலை இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

தேர்தல்

கர்நாடகம், குஜராத் உட்பட 12 மாநிலங்களின் 93 மக்களவை தொகுதிகளுக்கு, வரும் 7-ம் தேதி நடைபெறும் 3-வது கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் முடிவடைய 4 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள் முழுவீச்சில் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி, குஜராத் மாநிலம் பனஸ்கந்தா, ஹிமத் நகர் ஆகிய பகுதிகளில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி அசாம் மாநிலம் துப்ரியிலும்,

சமாஜ்வாடி கட்சித்தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் உத்தரபிரதேச மாநிலம் மெயின்புரியிலும் இன்று வாக்குளை திரட்டுகின்றனர்

2-வது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவிருந்து மத்திய பிரதேச மாநிலத்தின் பீட்டல் மக்களவை தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினர் காலமடைந்ததால் இத்தொகுதிக்கு 3-வது கட்ட தேர்தலின் போது வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

3-வது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவிருந்த குஜராத் மாநிலம் சூரத் தொகுதியில் பி.ஜே.பி. வேட்பாளர் ஒருமனதாக வெற்றி பெற்ற நிலையில், ஜம்மு கஷ்மீரின் அனந்த்நாக் ரஜோரி மக்களவை தொகுதிக்கு தேர்தல் அட்டவணை மாற்றப்பட்டதை அடுத்து, 94 தொகுதிகளுக்கான தேர்தல் தற்போது 93 மக்களவை தொகுதிகளாக குறைந்துள்ளது.

□□□□□□□

3-வது கட்டம்

3-வது கட்ட தேர்தலில் குஜராத் மாநிலத்தில் 25 மக்களவை தொகுதிகள்

கர்நாடகத்தில் 12 மஹாராஷ்டிராவில் 11

உத்தர பிரதேசத்தில் 10 மத்திய பிரதேசத்தில் 9

சட்டீஸ்கடில் 7 பீஹாரில் 5

அசாம் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 4

கோவா, தாத்ரா நாகர்ஹவேலி, டாமன் டையூவில் தலா 2 தொகுதிகளுக்கு இந்த தேர்தல் நடைபெறுகிறது.

3-வது கட்ட தேர்தலோடு வடகிழக்கு மாநிலங்கள் தமிழகம், கேரளம் உட்பட 16 மாநிலங்கள், மற்றும் புதுச்சேரி அந்தமான் நிக்கோபார், லட்சத்தீவு, தாத்ரா நாகர்ஹவேலி, டாமன் டையூ, யூனியன் பிரதேசங்களில் முழுமையாக மக்களவை தேர்தல் நிறைவு பெறுகிறது.

□□□□□□□

மறுவாக்குப்பதிவு ராஜஸ்தான்

இந்நிலையில் 2-ம் கட்ட தேர்தலின் போது ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட நந்த்சி கிராமத்தில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் மறு வாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்த வாக்குச்சாவடியில் நாளை காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

மாவட்ட தேர்தல் அதிகாரியும், பார்வையாளரும் வழங்கிய அறிக்கையை அடுத்து மறுவாக்குப்பதிவு நடத்த ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

□□□□□□□

தேர்தல் ஆணையம்

கோடைகாலத்தை கருத்தில் கொண்டு தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு தண்ணீர் பந்தல்கள் திறக்க எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தண்ணீர் பந்தல் அமைப்பதற்கான செயல்பாடுகளை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு தெரிவித்திருக்கிறார்.

தண்ணீர் பந்தல் திறக்க விரும்பும் அரசியல் கட்சியினரும், வேட்பாளர்களும் எவ்விதத்திலும் அரசியல் ரீதியாக இந்நடவடிக்கையை பயன்படுத்தக் கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

□□□□□□□

விபத்து

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே கடம்பன் குளத்தில் தனியாருக்கு சொந்தமான கல்குவாரியில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

இந்த கல்குவாரிக்கு தேவையான வெடி மருந்துகளை வாகனத்திலிருந்து இறக்கும் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட உராய்வால் இந்த சம்பவம் நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

□□□□□□□

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அதன் பயனாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும் என்று தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சகத்தின் செயலர் திருமதி சுமிதா தவ்ரா தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் நடைபெற்ற 16-வது மண்டல அளவிலான 2 நாள் ஆய்வுக்கூட்டத்தின் நிறைவுநாள் நிகழ்ச்சியில் பேசியஅவர், நாட்டின் மாபெரும் சமூக பாதுகாப்பு அமைப்பாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் செயல்பட்டு வருவதாக கூறினார்.

லட்சக்கணக்கான தொழிலாளர்களின் தேவைகளை ஆண்டு முழுவதும் இந்நிறுவனம் பூர்த்தி செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் சமூக பாதுகாப்பின் விரிவாக்கம் தொழிலாளர்களின் தேவைகளை சூழலுக்கு ஏற்றவாறு நிறைவேற்றி வருவதாக கூறினார்.

□□□□□□□

மே தினம்

தொழிலாளர் தினமான மே தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

உழைக்கும் மக்களின் சிறப்பினை உலகிற்கு பறைசாற்றும் வகையில் நாடுமுழுவரும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன

உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு 8 மணிநேர வேலையை உறுதிசெய்த நிகழ்வை கொண்டாடும் வகையில் 1889-ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் இந்நாளில் கடைபிடிக்கப்படுகிறது

இத்தினத்தை ஒட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்,

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி பி.ஜே.பி. மாநிலதலைவர் திரு. அண்ணாமலை உள்ளிட்டோர் தொழிலாளர்களுக்கு நல்வாழ்த்துக்களை உரித்தாக்கி உள்ளனர்.

சென்னை சிந்தாதிரி பேட்டையில் உள்ள மே தின நினைவு சின்னத்தில் மாநில அரசின் சார்பில் நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

□□□□□□□

மே தின கொண்டாட்டம்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் தூய்மைப் பணியாளர்கள் இனிப்புகளை வழங்கி தொழிலாளர் தினத்தை இன்று உற்சாகத்துடன் கொண்டாடினர்.

தென்காசி நகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டதுடன் பசுமையை பேணிகாக்கும் வகையில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்ப சங்கத்தினர் சார்பில் சிறப்பு பேரணி நடைபெற்றது.

□□□□□□□

துரைமுருகன்

தமிழ்நாட்டிற்கு உரிய காவிரி நீரை திறக்க மறுப்பு தெரிவிக்கும் கர்நாடக அரசை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை அணுகவுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கூறியுள்ளார்.

சென்னையில் மே தின நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதுதொடர்பாக காவிரி நீர் ஒழுங்காற்று மேலாண்மை குழுவின் உத்தரவை கர்நாடக அரசு நடைமுறைபடுத்துவதில்லை என்று குற்றம் சாட்டினார்.

□□□□□□□

சரக்குசேவை வரி

ஏப்ரல் மாதத்திற்கான ஒட்டு மொத்த சரக்குசேவை வரி வருவாய் வசூல், இதுவரை இல்லாத வகையில் 2 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் சாதனை அளவை எட்டியுள்ளது.

உள்நாட்டு பரிவர்த்தனைகள் மற்றும் இறக்குமதியின் மூலமான 12.4 சதவிகித வளர்ச்சியை இது பிரதிபலிப்பதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரீபண்ட் நடைமுறைகளுக்கு பின்னர் ஏப்ரல் மாதத்தில் மொத்த சரக்கு சேவை வருவாய் ஒருலட்சத்து 92 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது என்றும், இது சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 17 சதவிகித ஆக்கப்பூர்வமான வளர்ச்சியை பிரதிபலிப்பதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

□□□□□□□

வெடிகுண்டு

டெல்லி பள்ளிகளில் வெடிகுண்டு தொடர்பான போலி மின்னஞ்சல் அச்சுறுத்தல்கள் குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க காவல்துறை ஆணையரை, துணை நிலை ஆளுநர் லெப்டினன்ட் ஜென்ரல் திரு. வினய்குமார் சக்சேனா உத்தரவிட்டுள்ளார்.

இத்தகைய போலி அச்சுறுத்தல்களை வெளியிட்டோரை கண்டுபிடித்து உரிய தண்டனை வழங்க அவர் ஆணையிட்டுள்ளார்.

இதனிடையே அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட பள்ளிகளில் மாணவர்கள் வெளியேற்றப்பட்டு தேடுதல் வேட்டை நடைபெற்றதாகவும், வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் டெல்லி கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாநில அரசு தொடர்ந்து காவல்துறையினருடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக டெல்லியில் பள்ளிகளில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இத்தகவல்கள் போலியானவை என்றும், பெற்றோர்களும், மாணாக்கரும் பீதியடைய வேண்டாம் என்றும் காவல்துறை அறிவுறுத்தி உள்ளது.

□□□□□□□

முதுமலை

முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்மண்டல வன சரகங்களான தெப்பக்காடு, கார்குடி, மசினக்குடி, நிலக்கோட்டை, முதுமலை ஆகிய பகுதிகளில் நடப்பாண்டிற்கான வனவிலங்கு கணக்கெடுப்பு பணி இன்றுமுதல் வரும் 7ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

□□□□□□□

குருபெயர்ச்சி

குருபெயர்ச்சியை முன்னிட்டு திருவாரூர் மாவட்டம் ஆலங்குடி ஆபத் சகாயேஸ்வரர் திருக்கோவிலில் இன்றுமாலை சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

□□□□□□□

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், அதனை ஒட்டிய மாவட்டங்களில் இன்றும் நாளையும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்

.. வாய்ஸ் ..

□□□□□□□

பேட்மிட்டன்

சீன செங்குடுவில் நடைபெறும் தாமஸ் கோப்பை பேட்மிட்டன் ஆடவர் இறுதி லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இந்தியா இன்றுமாலை இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

ர்.ளு. பிரணாய், லக்ஷயாசென், கிடாம்பி ஸ்ரீகாந்த், பிரியான்ஷு ரஜாவத், கிரண் ஜார்ஜ், ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி, அர்ஜுன் துருவ்கபிலா, சாய்பிரதீப் உள்ளிட்டோர் இதில் களமிறங்குகின்றனர்.

□□□□□□□

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.